# சிங்கப்பூர் மரபுடைமைத் தொழில் திட்டம் 2025
## விண்ணப்பப் படிவம்

---

**சிங்கப்பூர் மரபுடைமைத் தொழில் திட்டம் 2025 விண்ணப்பப் படிவம்**

**பொதுவான வழிகாட்டிகள்**

1. தேசிய மரபுடைமை வாரியம் வழங்கும் சிங்கப்பூர் மரபுடைமைத் தொழில் திட்டம் 2025-க்கு (“**திட்டம்**”), கீழே கொடுக்கப்பட்டுள்ள தகுதி நிபந்தனைகளை நிறைவேற்றும், சிங்கப்பூரில் பதிவு செய்யப்பட்ட தொழில்கள் விண்ணப்பம் செய்யலாம்.

2. நாங்கள் சொந்த விண்ணப்பத்தையும் (கடை உரிமையாளரின் விண்ணப்பம்) பொது மக்களின் விண்ணப்பத்தையும் வரவேற்கிறோம். நீங்கள் ஒரு கடையை விண்ணப்பிக்க விரும்பினால், அந்தக் கடையின் அனுமதியை முதலில் பெற்றிருக்கவேண்டும்

3. இந்தப் படிவத்தில் உள்ள எல்லாப் பகுதிகளும் கட்டாயமாக நிரப்பப்படவேண்டும். பொருந்தாத கேள்விகளுக்கு "N.A" என எழுதவும். பொதுமக்கள் விண்ணப்பிக்கும்போது தெரியாத விவரங்களுக்கும் "N.A" என எழுதவும்.

4. விண்ணப்பங்கள் தட்டச்சு செய்யப்பட்டிருப்பதே விரும்பப்பட்டாலும், கையால் எழுதி ஸ்கேன் செய்த விண்ணப்பங்களையும் நாங்கள் ஏற்றுக்கொள்வோம். இந்தப் படிவத்தின் பூர்த்தி செய்யப்பட்ட மென்நகலை “pdf” கோப்பு வடிவிலும், மற்ற ஆதாரப் பத்திரங்கள் அனைத்தையும் https://go.gov.sg/sghbs25 இணையப்பக்கத்தில் உள்ள எங்களது இணையம்வழி படிவத்தின் வாயிலாகச் சமர்ப்பித்திடுங்கள்.

5. படிவத்தை ஆங்கில மொழியில் பூர்த்தி செய்யுமாறு பரிந்துரைக்கிறோம். ஆயினும், மெண்டரின், மலாய் அல்லது தமிழ் மொழிகளில் பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களையும் ஆதாரப் பத்திரங்களையும் நாங்கள் ஏற்றுக்கொள்வோம். வேறு மொழிகளில் சமர்ப்பிக்கப்படும் ஆதாரப் பத்திரங்களுக்கு, அவற்றின் சாரத்தை ஆங்கில மொழியில் தெரிவிக்கும் ஒரு பக்கப் பத்திரத்தைத் தருமாறு விண்ணப்பதாரர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

6. ஆதாரப் பத்திரங்கள், நிபந்தனைகள், சமர்ப்பிப்பு குறித்த விரிவான விளக்கங்கள் பற்றி மேல்விவரம் அறிய, தயவுசெய்து பின்னிணைப்பு A-ல் உள்ள விவரக்குறிப்பு மற்றும் சமர்ப்பிப்பு வழிகாட்டிகளைப் பாருங்கள். இத்திட்டத்திற்கான தேசிய மரபுடைமை வாரியம் இணையத்தளத்திலும் (https://go.gov.sg/sgheritagebusiness) இதை நீங்கள் காணலாம்.

7. சொந்த விண்ணப்பம் செய்வோர் எழுத்தறிவு பிரச்சனைகளால் அல்லது வேறு சவால்களால் இந்தப் படிவத்தைப் பூர்த்தி செய்வதில் சிரமங்களை எதிர்நோக்கினால், நாங்கள் அவர்களுக்கு உதவி செய்து, அவர்களது விண்ணப்பங்களை ஏற்கக்கூடும். உதாரணமாக, பெயர்த்தெழுத உதவி வழங்குதல் அல்லது விதிவிலக்கான சூழ்நிலைகள் என நாங்கள் கருதும் நிலையில், எங்களது இணையம்வழி படிவத்தின் வாயிலாகச் சமர்ப்பிக்கப்படாத விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுதல்.

8. உங்களுக்கு ஏதாவது கேள்விகள் இருந்தால் அல்லது உதவி தேவைப்பட்டால், sg_heritage_business@nhb.gov.sg முகவரியில் எங்களுக்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்.

**தகுதி நிபந்தனைகள்**

1. இந்தத் திட்டத்திற்குத் தகுதிபெற, விண்ணப்பிக்கப்படும் தொழில் பின்வரும் நிபந்தனைகளை நிறைவேற்றவேண்டும்:-

   (a) சிங்கப்பூரில் பதிவு செய்யப்பட்டு, சிங்கப்பூரில் இயங்கி வரவேண்டும்;

   (b) 1 ஜனவரி 2025 நிலவரப்படி குறைந்தது 30 ஆண்டுகள் தொடர்ந்து செயல்பட்டு வந்திருக்கவேண்டும். இதற்கான விதிவிலக்குகள் (i) விடுமுறைக்காக அல்லது வேறு நோக்கங்களுக்காகக் குறுகியகாலம் மூடப்பட்டிருத்தல், (ii) கொவிட்-19 கிருமிப்பரவலின்போது 2 ஆண்டுகளுக்கு மேற்போகாத காலகட்டம் மூடப்பட்டிருத்தல், அல்லது (iii) தேசிய மரபுடைமை வாரியத்தின் தனிப்பட்ட விருப்புரிமையின்படி, பரிசீலனைக்கு ஏற்கப்படப் பொருத்தமென வாரியம் கருதும் மற்ற மூடல்கள்;

   (c) குறைந்தது 30% பங்குமுதல் சிங்கப்பூரர்களுக்கு மற்றும்/அல்லது சிங்கப்பூர் நிரந்தரவாசிகளுக்கு நேரடியாக அல்லது மறைமுகமாகச் சொந்தமாக இருக்கவேண்டும். இது தனிப்பட்டவரின் இறுதி உரிமையின்படி நிர்ணயிக்கப்படும்; மற்றும்

   (d) மத்திய வட்டாரத்தில் அமைந்திருக்க வேண்டும் (தகுதிபெறும் இடங்களின் பட்டியலையும் அஞ்சல் குறியீடுகளையும் <u>பின்னிணைப்பு B-ல்</u> பார்க்கவும்).

2. அதோடு, விண்ணப்பிக்கப்படும் தொழில் பரிசீலனைக்கு ஏற்கப்படுவதற்குப் பின்வரும் நிபந்தனைகளை நிறைவேற்றவேண்டும்:-

   (a) 1 ஜனவரி 2025 நிலவரப்படி, அதே இடத்தில் அல்லது வட்டாரத்தில் கடந்த 30 ஆண்டுகளாக அமைந்திருக்கவேண்டும்;

   (b) பாரம்பரிய வணிகங்கள், பொருட்கள் மற்றும்/அல்லது சேவைகள் வழங்கவேண்டும் (எடுத்துக்காட்டுகளின் பட்டியலைப் பின்னிணைப்பு C-ல் பார்க்கவும்);

   (c) வலுவான சமூகத் தொடர்பை அல்லது விளைவுகளை வெளிக்காட்ட முடியவேண்டும்; மற்றும்

   (d) தனது மரபுடைமையைக் கட்டிக்காப்பதிலும், தொழிலை நீடித்து நிலைக்க வைப்பதிலும் கடப்பாடு கொண்டிருப்பதை வெளிக்காட்ட முடியவேண்டும்.

**<u>பிரிவு 1: விண்ணப்பப் முறை</u>**

| | | |
|---|---|---|
| விண்ணப்பிக்கும் முறை (ஒன்றில் குறியிடவும்) | ☐ கடை உரிமையாளர்களின் சொந்த விண்ணப்பம் | ☐ பொது மக்களின் விண்ணப்பம் |

**சிங்கப்பூர் மரபுடைமைத் தொழில் திட்டம் 2025**
விண்ணப்பப் படிவம்

---

**<u>பிரிவு 1A: விண்ணப்பதாரரின் விவரங்கள் (பொது மக்களின் விண்ணப்பம்)</u>**

நீங்கள் பிரிவு 1-ல் “கடை உரிமையாளர்களின் சொந்த விண்ணப்பம்” என்பதில் குறியிட்டிருந்தால், இந்தப் பிரிவைத் தாண்டிச் செல்லுங்கள்.

| | | |
|---|---|---|
| விண்ணப்பதாரரின் முகமன் மற்றும் முழுப்பெயர் (குடும்பப்பெயரை அடிக்கோடிடவும்) | (ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்)<br><br>திரு./குமாரி./திருமதி./டாக்டர்./பேராசிரியர். | |
| அடையாள அட்டை / கடவுச்சீட்டு எண் (நீங்கள் பொதுமக்கள் சார்பாக விண்ணப்பிப்பதாக இருந்தால் இவ்விவரத்தைத் தெரிவிக்கவும். கடவுச்சீட்டு எண்ணைக் கொடுப்பதாக இருந்தால், அது வழங்கப்பட்ட நாட்டைக் குறிப்பிடவும்) | | |
| நிறுவனத்தின் / அமைப்பின் பெயர் மற்றும் பதவிப்பெயர் (நீங்கள் ஒரு நிறுவனத்தின் அல்லது அமைப்பின் சார்பில் விண்ணப்பிப்பதாக இருந்தால் இவ்விவரத்தைத் தெரிவிக்கவும்) | | |
| தொடர்பு விவரங்கள் | தொடர்பு எண் | மின்னஞ்சல் |
| விண்ணப்பிக்கப்படும் தொழிலுடனான உறவுமுறை | ☐ வாடிக்கையாளர்<br>☐ சமூகப் பங்காளி<br>☐மற்றவை (*தயவுசெய்து குறிப்பிடவும்):* | |

**பிரிவு 2: விண்ணப்பிக்கப்படும் தொழிலின் விவரங்கள்**

| | |
|---|---|
| தொழிலின் பெயர் | |
| பதிவு செய்யப்பட்ட நிறுவனத்தின் பெயர் (தொழிலின் பெயரின் பதிவு செய்யப்பட்ட பெயரும் ஒன்றாக இருந்தால் “N.A” எனக் குறிப்பிடவும்) | |
| விண்ணப்பதாரரின் முழுப்பெயர் (கடையின் சார்பாக விண்ணப்பிக்கும் நபர்) **நீங்கள் பிரிவு 1A-ஐ பூர்த்தி செய்திருந்தால், இப்பகுதியை நிரப்பவேண்டாம்)** | |
| விண்ணப்பிக்கப்படும் தொழிலுடனான உறவுமுறை **(நீங்கள் பிரிவு 1A-ஐ பூர்த்தி செய்திருந்தால், இப்பகுதியை நிரப்பவேண்டாம்)** | ☐ உரிமையாளர்<br>☐ பங்குதாரர்<br>☐ ஊழியர் *(பதவிப்பெயர்):*<br>☐ மற்றவை *(தயவுசெய்து குறிப்பிடவும்):* |
| மரபுடைமைத் தொழிலின் உரிமையாளர்(கள்) (இவரும் விண்ணப்பதாரரும் ஒரே நபர் என்றால் “N.A” எனக் குறிப்பிடவும்) | |
| தொழிலின் முகவரி | |
| தொலைபேசி எண் | |
| தொழிலின் மின்னஞ்சல் முகவரி (கொடுக்கப்படும் மின்னஞ்சல் முகவரியைப் பயன்படுத்தி தொழிலுடன் | |

| | |
|---|---|
| நாங்கள் தொடர்பு கொள்வோம்) | |
| தொழிலின் இணையத்தளம், மற்றும் சமூக வலைத்தளங்கள், இருந்தால் | |
| தொடங்கப்பட்ட ஆண்டு (சொந்தமாக விண்ணப்பிக்கும் தொழில்கள், தயவுசெய்து தொழிலின் வயதுக்கு ஆதாரம் வழங்கவும். எ.கா. ஆதாரப் பத்திரமாக ACRA தொழில் விவரப்பதிவு) | |
| இந்தத் தொழில் செயல்பட்டுவரும் காலகட்டத்தில் இடம் மாறியிருக்கிறதா? (ஒன்றுக்கு மேற்பட்ட கிளைகள் உள்ள தொழில்களுக்கு, ஆரம்ப / முன்னோடி கடையை மட்டும் குறிப்பிடவும்) | ☐ஆமாம்<br>☐இல்லை<br>☐எனக்குத் தெரியாது |
| பொருந்துமாயின், இந்தத் தொழில் இதற்குமுன் அமைந்திருந்த இடங்களையும், அந்த இடங்கள் ஒவ்வொன்றிலும் செயல்பட்டுவந்த ஆண்டுகளையும் பட்டியலிட்டு, இடையில் கடை மூடப்பட்டிருந்த காலகட்டத்தையும் குறிப்பிடவும் (பொருந்தாவிட்டால் “N.A” எனக் குறிப்பிடவும். முந்திய பகுதியில் “எனக்குத் தெரியாது” என நீங்கள் குறிப்பிட்டிருந்தால், இப்பகுதியை நீங்கள் காலியாக விட்டுவிடலாம்) | *எ.கா. 1997-2999 \| 123 வீதியின்பெயர்* |

<table>
<tr><td rowspan="3">தொழிலை ஆகச் சரியாக விவரிக்கும் விளக்கத்தை தேர்ந்தெடுக்கவும் (பொருத்தமான அனைத்திலும் குறியிடவும்)</td><td>☐</td><td>இந்தத் தொழில் உணவுப் பொருட்களை விற்பனை செய்கிறது (பலகாரங்கள், உலர்ந்த பொருட்கள் போன்றவை உட்பட)</td><td>☐</td><td>இந்தத் தொழில் கைவினைப் பொருட்களை விற்பனை செய்கிறது (ஆடைகள், ஆபரணங்கள், மற்ற கைவினைப்பொருட்கள் உட்பட)</td></tr>
<tr><td>☐</td><td>இந்தத் தொழில் சேவைகள் வழங்குகிறது (எ.கா. திருமண ஏற்பாடு, தையல், பழுதுபார்ப்புச் சேவைகள் போன்றவை)</td><td>☐</td><td>மற்றவை</td></tr>
<tr><td colspan="4">“மற்றவை” என்றால், தயவுசெய்து குறிப்பிடவும்:</td></tr>
<tr><td>இந்தத் தொழில் யாருக்குச் சேவை செய்கிறது என்பதை விளக்கவும்</td><td colspan="4">எ.கா. என் தொழில் உள்ளூர் மலாய்ச் சமூகத்திற்குச் சேவை செய்கிறது; என் தொழில் இந்தப் பாரம்பரியத்தைச் சேர்ந்த பரந்த சமூகத்திற்குச் சேவை செய்கிறது.</td></tr>
</table>

**<u>பிரிவு 3: விண்ணப்பத்தின் விவரங்கள்</u>**

- கீழே உள்ள வாக்கியங்களுக்குப் பொருத்தமான பதில்களைத் தேர்ந்தெடுங்கள்.
- விண்ணப்பதாரர்கள் கீழே உள்ள வாக்கியங்களில் எதற்காவது "ஆமாம்" எனக் குறிப்பிட்டிருந்தால், அடுத்த பகுதியில் **தங்கள் பதில்களுக்கு விரிவான விளக்கம் தரவேண்டும்**.
- பொருந்துகின்ற சூழ்நிலைகளில், https://go.gov.sg/sghbs25 விண்ணப்பப் பக்கத்தில் தேவையான ஆதாரப் பத்திரங்களின் ஸ்கேன் செய்த நகல்களை (ஆதரவுக் கடிதங்கள், செய்திகள், நற்சான்றுகள், காணொளிகள், புகைப்படங்கள் போன்றவை) இணைத்திடுங்கள்.
- மேற்கொண்டு தகவல் மற்றும்/அல்லது சமர்ப்பிக்கப்பட்ட ஆதாரப் பத்திரங்களின் சான்றளிக்கப்பட்ட உண்மையான நகல்கள் தருமாறு கேட்கும் உரிமை தேசிய மரபுடைமை வாரியத்திற்கு உண்டு.

**(a) மரபுடைமையுடனான சம்பந்தமும் கடப்பாடும்**

இந்தப் பகுதி, விண்ணப்பிக்கப்படும் கடையின் மரபுடைமை முக்கியத்துவத்தையும், மரபுடைமையைக் கட்டிக்காத்து நிலைநாட்டும் அம்சங்களிலும் பாரம்பரியங்களிலும் உள்ள கடப்பாட்டையும் மதிப்பிடுகிறது.

| | ஆமாம் | இல்லை | எனக்குத் தெரியாது |
|---|---|---|---|
| (i) இந்தத் தொழில் வரலாற்று அல்லது பாரம்பரிய** இயல்புள்ள உள்ளூர் பொருளை அல்லது சேவையை வழங்குகிறதா?<br><br>**கடந்தகாலத்துடன் தொடர்புள்ளது மற்றும்/அல்லது குறிப்பிடத்தக்கக் காலகட்டத்திற்குப் பரம்பரை பரம்பரையாக நீடித்திருப்பது*<br>***உள்ளூர் அல்லது கலாசாரப் பழக்கவழக்கங்கள் அல்லது சடங்குகளுடன் தொடர்புள்ளது*<br><br>*எடுத்துக்காட்டுகளின் பட்டியலுக்குப் பின்னிணைப்பு B-ஐ பார்க்கவும்.* | ☐ | ☐ | ☐ |
| (ii) இந்தத் தொழில் ஒரு குறிப்பிட்ட கைவினைக்கலையில், பொருளில் அல்லது சேவையில் நிபுணத்துவம் பெற்றிருக்கும் மிகச்சிலவற்றில் ஒன்று, அல்லது ஒரு குறிப்பிட்ட கைவினைக்கலையில், பொருளில் அல்லது சேவையில் அதிகளவு வல்லமை பெற்றிருப்பது. | ☐ | ☐ | ☐ |
| (iii) இந்தத் தொழில் பாரம்பரிய வணிகங்கள், பழக்கவழக்கங்கள் அல்லது கைவினைக்கலைகளை வளர்க்கும் நிகழ்ச்சிகளை அல்லது நடவடிக்கைகளை | ☐ | ☐ | ☐ |

| | | | |
|---|---|---|---|
| நடத்தியிருக்கிறது அல்லது அவற்றில் பங்கெடுத்திருக்கிறது.<br><br>*எ.கா. ஒரு பயிலரங்குக்கு, தொழிலின் பணிக்கூட / பட்டறை சுற்றுலாவுக்கு, உணவைச் சுவைக்கும் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருக்கிறது மற்றும்/அல்லது அவற்றில் பங்கெடுத்திருக்கிறது,* | | | |
| (iv) இந்தத் தொழில் மரபுடைமையைக் கட்டிக்காக்கும் முயற்சிகளுக்காக விருதுகள் அல்லது அங்கீகாரம் பெற்றிருக்கிறது.<br><br>.<br>*எ.கா. "அங்கீகாரம்" என்பதில் செய்திக் கட்டுரைகள் வலைத்தளச் செய்திகள், பிரமுகர்களின் பாராட்டுகள் போன்றவை உள்ளடங்கலாம்.* | ☐ | ☐ | ☐ |
| (v) இந்தத் தொழில் தனது வரலாற்றையும் மரபுடைமையையும் ஆவணப்படுத்தவும் பரப்பவும் முயற்சி எடுத்திருக்கிறது.<br><br>*எ.கா. மின்னியல்மயமாக்கப்பட்ட சமையல் குறிப்புகள், ஆவணப்படுத்தப்பட்ட/ பாதுகாக்கப்பட்ட புகைப்படக்கள் போன்றவை.* | ☐ | ☐ | ☐ |
| (vi) இந்தத் தொழில் எதிர்கால விளம்பர, ஆவணமாக்கல் முயற்சிகளில் பங்குபெறுவதில் நாட்டம் கொண்டுள்ளது. | ☐ | ☐ | ☐ |

| |
|---|
| *நீங்கள் "ஆமாம்" எனக் குறிப்பிட்டுள்ள அனைத்து வாக்கியங்களுக்கும், கீழே உள்ள பகுதியில் ஆதரவளிக்கும் விவரங்களைத் தெரிவித்திடுங்கள் (எ.கா. பொருள் அல்லது சேவையின் விவரங்கள்; கிடைத்த விருதுகள் போன்றவை).* ***எடுத்துக்காட்டுகளை "புல்லட் புள்ளிகளாக" பட்டியலிடுங்கள்.***<br><br>*படிவத்தை எங்களது மின்னிலக்கச் சமர்ப்பிப்புப் பக்கத்தில் பதிவேற்றும்போது, உங்கள் கூற்றுகளை ஆதரிக்கும் ஆதாரப் பத்திரங்களைத் தயார்ப்படுத்திக் கொள்ளுங்கள்.* |
| |

**(b) சமூகத் பிணைப்புகள்**

இந்தப் பகுதி, விண்ணப்பிக்கப்படும் கடை ஒரு குறிப்பிட்ட சமூகத்திற்கு அல்லது அக்கம்பக்கத்திற்கு ஆற்றிய பங்களிப்பையும், சமூகத்திலும் அக்கம்பக்கத்திலும் தொழிலின் ஈடுபாட்டு அளவையும், சமூக முனைப்புகளில் பங்கேற்கும் நாட்டத்தையும் மதிப்பிடுகிறது.

| | ஆமாம் | இல்லை | எனக்குத் தெரியாது |
|---|---|---|---|
| (i) இந்தத் தொழில் அதன் அக்கம்பக்கத்தில் அல்லது வட்டாரத்தில் நிலைப்பேறுபெற்றது அல்லது நன்கறியப்பட்டது. | ☐ | ☐ | ☐ |
| (ii) இந்தத் தொழில் ஒரு குறிப்பிட்ட சமூகத்தால் அல்லது பிரிவால் மதிக்கப்படும் பொருட்களை அல்லது சேவைகளை வழங்குகிறது, அல்லது வலுவான சமூக ஆதரவைப் பெற்றுள்ளது.<br><br>*எ.கா. சுற்றுவட்டாரச் சமூகத்தின் விருப்பங்களை நிறைவுசெய்யும் ஒரு மளிகைக்கடை, விசுவாசமான வாடிக்கையாளர்களைக் கொண்ட உள்ளூர் உணவகம் போன்றவை.* | ☐ | ☐ | ☐ |
| (iii).இந்தத் தொழில் கடந்த பத்து (10) ஆண்டுகளில் சமூக நடவடிக்கைகளுக்கு அல்லது திட்டங்களுக்கு ஏற்பாடு செய்திருக்கிறது அல்லது அவற்றில் பங்கெடுத்திருக்கிறது.<br><br>*எ.கா. சமூக நடவடிக்கைகளில் தொழில் பங்கெடுத்த கலாசார விழாக்கள், தனிப்பட்ட நிகழ்ச்சிகள் அல்லது அக்கம்பக்க சமூக நிலையம், பள்ளிகள் போன்ற உள்ளூர் அமைப்புகள் ஏற்பாடு செய்த திட்டங்கள், மற்றும்/அல்லது சுயேச்சையாக நடத்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை உள்ளடங்கலாம்.* | ☐ | ☐ | ☐ |
| (iv) இந்தத் தொழில் சமூகத்திலுள்ள தனிநபர்களுக்கு அல்லது அமைப்புகளுக்கு ஆதரவு வழங்கியுள்ளது (எ.கா. நன்கொடைகள், பொருளாதரவு, அல்லது ஒரு குழுவில் சேவையாற்றுதல்). | ☐ | ☐ | ☐ |
| (v) இந்தத் தொழில் மற்ற வகையான உள்ளூர் அல்லது சமூக அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது.<br><br>*எ.கா. தொழிலின் சமூகத் தாக்கத்தை எடுத்துரைக்கும் வலைத்தளச் செய்திகள், அக்கம்பக்கத்திற்கு ஆற்றிய பங்களிப்புக்காகத் தொழிலைப் பாராட்டும் விருதுகள், வாடிக்கையாளர்களின் பாராட்டுக் கடிதங்கள் போன்றவை.* | ☐ | ☐ | ☐ |

| | | | |
|---|---|---|---|
| (vi) இந்தத் தொழில் மூடிவிட்டால் அல்லது மறைந்துவிட்டால், எங்கள் வட்டாரத்தின் இயல்பும் அடையாளமும் மாறிவிடும். | ☐ | ☐ | ☐ |

| |
|---|
| *நீங்கள் “ஆமாம்” எனக் குறிப்பிட்டுள்ள அனைத்து வாக்கியங்களுக்கும், கீழே உள்ள பகுதியில் ஆதரவளிக்கும் விவரங்களைத் தெரிவித்திடுங்கள் (எ.கா. பங்கெடுத்த சமூக நடவடிக்கைகள் போன்றவை).* ***எடுத்துக்காட்டுகளை சுருக்கமாகச் பட்டியலிடுங்கள்.***<br><br>*படிவத்தை எங்களது மின்னிலக்கச் சமர்ப்பிப்புப் பக்கத்தில் பதிவேற்றும்போது, உங்கள் கூற்றுகளை ஆதரிக்கும் ஆதாரப் பத்திரங்களைத் தயார்ப்படுத்திக் கொள்ளுங்கள்.* |
| |

**(c) புத்தாக்கம் மற்றும் தொழிலின் நீடித்த நிலைத்தன்மை**

இந்தப் பகுதி, விண்ணப்பிக்கப்படும் கடையின் நீடித்த நிலைத்தன்மையை உறுதி செய்வதற்காக மேற்கொண்ட முயற்சிகளையும் அவரது கடப்பாட்டையும் மதிப்பிடுகிறது.

| | ஆமாம் | இல்லை | எனக்குத் தெரியாது |
|---|---|---|---|
| (i) இந்தத் தொழில் தன்னை மேம்படுத்திக்கொள்ள அல்லது புத்தாக்கத்தைப் புகுத்த கண்கூடான முயற்சிகளை எடுத்துள்ளது.<br><br>*எ.கா. புதிய நடைமுறைகள் அமலாக்கப்பட்டன, தொழில் விரிவுபடுத்தப்பட்டது, புதிய தயாரிப்புகள் அல்லது சேவைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.* | ☐ | ☐ | ☐ |
| (ii) இந்தத் தொழில் புத்தாக்கத்தைப் புகுத்த அல்லது தன்னை மேம்படுத்திக்கொள்ள வாய்ப்புகளைத் தொடர்ந்து தேடியுள்ளது.<br><br>*எ.கா. கடந்த 5 ஆண்டுகளில் மானியங்களுக்கு விண்ணப்பம் செய்துள்ளது, மற்ற அமைப்புகளுடன் கூட்டிணைந்து செயல்பட்டுள்ளது. தொழில் நிர்வாகத்தையும் வளர்ச்சியையும் மேம்படுத்த வழிகாட்டிகளை நாடியுள்ளது.* | ☐ | ☐ | ☐ |
| (iii) இந்தத் தொழில் எதிர்காலத்தில் புத்தாக்கம் மற்றும்/அல்லது மேம்பாட்டு முனைப்புகளை மேற்கொள்ள திட்டங்கள் வகுத்துள்ளது.<br><br>*எ.கா. இந்தத் தொழில் தனது வணிகச்சின்னத்தைப் புதுப்பிக்கவும், அண்மைத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தொழில் நடைமுறைகளை மேம்படுத்தவும் தற்போது திட்டமிடுகிறது, தொழிலின் வளர்ச்சிக்காக ஊழியர்களின் எண்ணிக்கையை அதிகரித்தது, தொழிலில் புதியனவற்றை அறிமுகப்படுத்துவதற்காகச் சந்தை ஆய்வை மேற்கொள்கிறது, போன்றவை.* | ☐ | ☐ | ☐ |
| (iv) இந்தத் தொழில் அடுத்த ஐந்து (5) ஆண்டுகளுக்கு நீடித்து நிலைத்திருப்பதில் கடப்பாட்டை வெளிப்படுத்துகிறது.<br><br>*எ.கா. பயிற்சி தருவதற்கு ஊழியர்களை அடையாளம் கண்டுள்ளது, தலைமைத்துவ வாரிசுக்குத் திட்டமிட்டுவிட்டது/ திட்டமிடுகிறது போன்றவை.* | ☐ | ☐ | ☐ |

| |
|---|
| *நீங்கள் "ஆமாம்" எனக் குறிப்பிட்டுள்ள அனைத்து வாக்கியங்களுக்கும், கீழே உள்ள பகுதியில் ஆதரவளிக்கும் விவரங்களைத் தெரிவித்திடுங்கள் (எ.கா. பங்கெடுத்த சமூக நடவடிக்கைகள் போன்றவை).* ***எடுத்துக்காட்டுகளை சுருக்கமாகச் பட்டியலிடுங்கள்.*** <br><br> *படிவத்தை எங்களது <u>மின்னிலக்கச் சமர்ப்பிப்புப் பக்கத்தில்</u> பதிவேற்றும்போது, உங்கள் கூற்றுகளை ஆதரிக்கும் ஆதாரப் பத்திரங்களைத் தயார்ப்படுத்திக் கொள்ளுங்கள்.* |
| |

**<u>பிரிவு 4: மற்ற பொது மானியங்கள் / நிதியளிப்பு அல்லது தேசிய மரபுடைமை வாரியத்தின் திட்டங்களுடனான தொடர்பு</u>**

- பொதுமக்கள் விண்ணப்பிக்கும்போது இப்பகுதியை நிரப்பத் தேவையில்லை.
- கீழே உள்ள வாக்கியங்களுக்குப் பொருத்தமான பதில்களைத் தேர்ந்தெடுங்கள்.

| | Yes<br>ஆமாம் | No<br>இல்லை | I don't know<br>எனக்குத் தெரியாது |
|---|---|---|---|
| இந்தத் தொழில் தேசிய மரபுடைமை வாரியத்திடம் அல்லது வேறு பொது அமைப்பிடம் மானியங்கள் அல்லது நிதியளிப்பு போன்ற ஏதாவதொரு வகையான ஆதரவுக்கு விண்ணப்பம் செய்திருக்கிறதா? | ☐ | ☐ | ☐ |
| இந்தத் தொழில் தேசிய மரபுடைமை வாரியம் நடத்திய மற்ற திட்டங்கள் எதிலாவது பங்கெடுத்திருக்கிறதா? மரபுடைமைச் செயலாக்க மையங்கள், தெருமுனை மரபுடைமை காட்சிக்கூடம் அல்லது சிங்கப்பூர் மரபுடைமை விழா போன்றவை இதில் உள்ளடங்கும். | ☐ | ☐ | ☐ |

*மேற்காணும் கேள்விகளில் எதற்காவது நீங்கள் "ஆமாம்" எனப் பதில் அளித்திருந்தால், மானியங்கள், நிதியளிப்பு, தொழில் பங்கெடுத்த நிகழ்ச்சிகள் அனைத்தையும் பட்டியலிடுங்கள்.*

*எங்களது <u>மின்னிலக்கச் சமர்ப்பிப்புப் பக்கத்தில்</u> பதிவேற்றவேண்டிய ஆதாரப் பத்திரங்களைத் தயார்ப்படுத்திக் கொள்ளுங்கள்.*

| ***ஆண்டு*** | ***அமைப்பு*** | ***பெயர்*** | ***விளக்கம்*** |
|---|---|---|---|
| *எ.கா. 2023* | *எ.கா. தேசிய மரபுடைமை வாரியம்* | *எ.கா. Organization Transformation Grant* | *எ.கா. வழங்கப்பட்ட தொகை, பங்கேற்பின் இயல்பு, போன்றவை* |
| | | | |
| | | | |
| | | | |

**பிரிவு 5: ஒப்புதலும் ஏற்பும்**

| **இந்தப் படிவத்தில் வழங்கப்பட்டிருக்கும் தகவலைப் பயன்படுத்த ஒப்புதல்** |
|---|
| ☐ நான் இந்தப் படிவத்தில் வழங்கியுள்ள தனிப்பட்ட தகவல்களை தேசிய மரபுடைமை வாரியம் பின்வரும் நோக்கங்களுக்காகச் சேகரிக்கவும், பயன்படுத்தவும், வெளியிடவும் நான் ஒப்புதல் அளிக்கிறேன்:-<br><br>(a) இந்த விண்ணப்பத்தை மதிப்பிடுவதற்காக, அதோடு மேல்விவரம் பெறுவதற்காக அல்லது விண்ணப்பத்தின் முடிவின் தொடர்பில் என்னுடன் தொடர்பு கொள்வதற்காக; மற்றும்<br><br>(b) நான் கொடுக்கும் தனிப்பட்ட விவரங்களை தேசிய மரபுடைமை வாரியம் தங்கள் பதிவுகளுக்காக சேகரித்து, பாதுகாத்து, பயன்படுத்திக் கொள்ள சம்மதிக்கிறேன். அவர்கள் இந்த தகவல்களை தங்களின் தனிப்பட்ட தகவல்களைப் பாதுகாக்கும் விதிகளின்படி பாதுகாப்பார்கள்.<br><br>நான் எனது ஒப்புதலை எப்போது வேண்டுமானாலும் மீட்டுக்கொள்ளலாம். ஆனால் அவ்வாறு செய்தால், இந்த விண்ணப்பமே ரத்து செய்யப்படும் என்பதை நான் புரிந்துகொள்கிறேன். |
| ☐ நான் பின்வருபவற்றுக்குச் ஒப்புதல் அளிக்கிறேன்:-<br><br>(a) இந்தப் படிவத்தில் வழங்கப்பட்டுள்ள ஏதேனும் தகவலை, விண்ணப்பத்தை மதிப்பிடும் நோக்கத்திற்காக அல்லது பொதுக் கொள்கை பகுப்பாய்வு அல்லது உருவாக்கத்திற்காக அல்லது பொதுத் தரவுப் பகுப்பாய்வு நோக்கத்திற்காக மற்ற பொது அமைப்புகளிடமும், வெளி தணிக்கையாளர்கள் மற்றும் மதிப்பீட்டாளர்களிடமும் வெளியிடுதல்; மற்றும்<br><br>(b) இந்த விண்ணப்பத்தை மதிப்பிடுவதற்குப் பொருத்தமென தேசிய மரபுடைமை வாரியம் கருதும் வேறு மூலங்களிலிருந்து வாரியம் தகவல் பெறுதல் மற்றும் அவற்றிடம் தகவலைச் சரிபார்த்தல். |

| **இந்தப் படிவத்தில் வழங்கப்பட்டுள்ள தகவலின் உண்மைத்தன்மை/பிழையின்மை தொடர்பான உறுதியளிப்புகள்** |
|---|
| ☐ நான் இந்தப் படிவத்தில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் / தகவல்கள், மற்றும் அவற்றின் துணைத் தகவல்கள் ஆகியவை எனக்குத் தெரிந்தவரை உண்மையாகவும் சரியாகவும் இருப்பதாகவும், எந்தவொரு முக்கிய விவரத்தையும் நான் மறைக்கவோ அல்லது திரிக்கவோ இல்லை என்றும் உறுதியளிக்கிறேன். |
| ☐ இந்த விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள ஏதேனும் விவரத்தை அல்லது தகவலைப் பாதிக்கக்கூடிய மாற்றங்கள் ஏதாவது இருந்தால், தேசிய மரபுடைமை வாரியத்திடம் உடனடியாகத் தெரியப்படுத்தவேண்டிய தொடர் கடமை எனக்கிருப்பதை நான் புரிந்துகொண்டேன். |

| **விலக்குரிமை** |
|---|

| |
|---|
| ☐ நான் இந்த விண்ணப்பம் தொடர்பாக தேசிய மரபுடைமை வாரியத்திற்கு எதிராகச் செய்யப்படக்கூடிய கோரிக்கைகளிலிருந்து தேசிய மரபுடைமை வாரியத்திற்கு விலக்குரிமை அளிக்க இணங்குகிறேன். |

| **விண்ணப்பிக்கப்படும் கடையின் ஒப்புதல் (பொதுமக்கள் விண்ணப்பிக்கும்போது மட்டும் குறியிடவும்)** |
|---|
| ☐ நான் இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதற்கும், இப்படிவத்தில் கடையின் விவரங்களை வழங்குவதற்கும், கடை உரிமையாளரிடமிருந்து முறையான அனுமதி பெற்றுள்ளேன் என உறுதியளிக்கிறேன். |

கையொப்பம் தேதி

_______________________ _____________________

முழுப் பெயர்:

(தனிப்பட்ட முறையில் விண்ணப்பிப்பவர்) அடையாள அட்டை / கடவுச்சீட்டு எண்:________________________

வெளியிடப்பட்ட நாடு (கடவுச்சீட்டு எண் குறிப்பிடப்பட்டிருந்தால்):_________________________________

(கடை உரிமையாளர் சார்பில் விண்ணப்பிப்பவர்) பதவிப்பெயர்:
__________________________

நிறுவனத்திற்காக / அமைப்பிற்காக அதன் சார்பில்

பெயர்:_____________________________

**சமர்ப்பிப்பின் சரிபார்ப்புப் பட்டியல்**

| **இந்த விண்ணப்பப் படிவத்தைச் சமர்ப்பிக்குமுன், பின்வருபவற்றை நான் உறுதி செய்து விட்டேனா?** | **இது பூர்த்தி செய்யப்பட்டிருந்தால் கீழே ஏற்புக்குறியுடன் குறிப்பிடுங்கள்** |
|---|---|
| விண்ணப்பிப்பவரின் விவரம் (பொருந்துமாயின்), உறுதியளிப்புகள் போன்ற அனைத்து விவரங்களும் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. | ☐ |
| விண்ணப்பத்தின் விவரங்களின்கீழ் விளக்கவுரைகள் சொல் வரம்புக்குள் எழுதப்பட்டு, தேவையான ஆதாரங்களுடன் நிரூபிக்கப்பட்டுள்ளன. | ☐ |
| ஆதாரப் பத்திரங்களின் ஸ்கேன் நகல்கள் அல்லது படியெடுத்த நகல்கள் அனைத்தும் மின்னிலக்கச் சமர்ப்பிப்புப் படிவத்தில் இணைப்புகளாகச் சேர்க்கப்பட்டுவிட்டன | ☐ |